தமிழ் இளையோர் அமைப்பு இத்தாலி
Associazione Giovani Tamil
www.giovanitamil.org
giovanitamil@gmail.com

25/03/2015,

இத்தாலி.

பத்தாவது வருடமாக இளந்தளிர் நிகழ்வை நடாத்தும் பிருத்தானியா தமிழ் இளையோர் அமைப்புக்கு இத்தாலி தமிழ் இளையோர் அமைப்பு சார்பாக எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஈழத் தமிழர்களுடைய தேசியம், மொழி, கலை, பண்பாடு என்பவற்றை மையக் கருவாகக் கொண்டு அமைந்துள்ள இந்நிகழ்வு புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழ் இளையோர்களுக்கு எமது தேசிய அடையாளங்களையும் வரலாற்றையும் வலியுறுத்தக்கூடிய ஒரு முக்கிய தருணமாக அமையும். மேலும் எமது ஈழத்து கலைஞர்களை ஊக்குவிக்கும் முகமாகவும் இந்நிகழ்வு அமைகின்றது.
எம் விடுதலைப் பயணத்தில் எமது அடையாளங்களை பேணுவது அவசியம் ஆகும், ஆகையால் இவ்வாறான நிகழ்வுகளை தொடர்ச்சியாகவும் சிறப்பாகவும் நடாத்த பிருத்தானிய தமிழ் இளையோர் அமைப்பை நாம் வாழ்த்துகிறோம்.

வருகிற மார்ச் 28ம் திகதி நடைபெறவுள்ள இளந்தளிர் நிகழ்வுக்கு பிருத்தானியாவில் வாழும் எம் தமிழ் உறவுகள் அனைவரையும் கலந்து கொண்டு ஆதரவு வழங்கி சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி

தமிழ் இளையோர் அமைப்பு இத்தாலி